

தேனி மாவட்டம் காமாட்சிபுரத்தில், தென்னை மரங்களின் நண்பர்கள் திட்டத்தில், மரம் ஏறும் பயிற்சி பெறும் பெண்கள்.

# தென்னை மரம் ஏற பெண்கள் ஆர்வம் எளிமையாகுது சுய வேலை வாய்ப்பு

சின்னமனூர், ஜன. 14-

தென்னை விவசாயத்தை மேம்படுத்தி, விளைச்சல் பரப்பை அதிகரிக்க, மத்திய அரசு தமிழகத்தில் 'தென்னை மரங்களின் நண்பன்' திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.இதில் பெண்கள் ஆர்வமுடன் பங்கேற்பதால்,சுய வேலை வாய்ப்பு எளிமையாகிறது.

இந்திய அளவில், தென்னை சாகுபடியில் தமிழகம் மூன்றாம் இடத்தை பிடிக்கிறது. ஆனால், உற்பத்தி திறனில் முதலிடத்தை பிடித்துள்ளது.கடந்த 10 ஆண்டுகளாக இந்திய அளவில், தென்னை விவசாயத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதனால் தென்னை சாகுபடி பரப்பு குறைந்துள்ளது.

தேனி மாவட்டத்தில் 4 லட்சத்து,10 ஆயிரத்து 149 ஹெக்டேராக இருந்த, தென்னை சாகுபடி பரப்பளவில் 17 சதவீதம் குறைந்துள்ளது. ஒரு ஹெக்டேரில் விளைந்த 14 ஆயிரத்து 371 காய்களிலும் குறைவு ஏற்பட்டுள்ளது. மற்ற பயிர்களை விட தென்னையில், எளிதில் நோய்களின் தாக்கம் ஏற்படுவதாலும், பராமரிப்பும், செலவினங்களும் அதிகம் ஏற்படுவதாலும், தற்போது தென்னை விவசாயத்தை மாற்றி வேறு பயிருக்கு மாறுகின்றனர்.

இந்நிலையை மாற்றும் வகையில்,மத்திய அரசு, 'தென்னை மரங்களின் நண்பன்' திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இந்திய அளவில் இத்திட்டம், முதலில் கேரளாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இரண்டாவதாக தற்போது தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தென்னை விவசாயத்தில் அனைத்து மட்டத்திற்கும், உதவும் வகையில் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு நிறுவனமான, கே.வி.கே., (கிரிஷி விகான் கேந்திரா) வாயிலாக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தேனி மாவட்டத்தில், காமாட்சிபுரம் சென்டெக்ட் இத்திட்டத்தை செயல்படுத்துகிறது.கிராமப்புற இளைஞர்கள், பெண்களுக்கு ஒரு வாரம் இலவச பயிற்சி தரப்படுகிறது.

தென்னை மரம் ஏறுதல், தென்னை சாகுபடி குறித்த தொழில்நுட்ப பயிற்சி, தலைமை பண்பு வளர்ப்பு பயிற்சி, யோகா, மூச்சு பயிற்சிகள் வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன் தென்னை மரம் ஏறும் கருவி இலவசமாக தரப்படுகிறது. ரூ.1 லட்சத்திற்கான இலவச இன்ஸ்சூரன்ஸ் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில், பெண்கள் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றனர்.

இப்பயிற்சி தற்போது காமாட்சிபுரம் சென்டெக்ட் அறிவியல் மையத்தில் நடந்து வருகிறது. இதில் சேர இருபாலருக்கும் 18 முதல் 40 வயது வரை இருக்க வேண்டும். குறைந்தபட்சம் 7 ம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும். 94420 25109 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.